*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07032026.03*

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
https://tamilmanam.in/
Issue DOI: https://doi.org/10.63300/tm07032026

# The Life Philosophies and Traditional Worship Practices of the Sanmarga Communities: A Study in the Context of Agam, Shaivism, and Arya Traditions.

**Ms. Himarthika Thulasithasan*,**

Temporary Assistant Lecturer in Bharathanatyam, Department of Dance, Drama & Theater, Swami Vipulananda Institute of Aesthetic Studies, Eastern University, Sri Lanka.
*Correspondence: himahimarthi1031@gmail.com, Tel: Tel: 0094711948411

**Article Info**
Received on 20-Feb-2026, Revised on 25-Feb-2026, Accepted on 25-Feb-2026, Published on 01-Mar-2026

## ABSTRACT

*This study examines the life philosophies and traditional worship practices of the Sanmarga communities in the Indian subcontinent from a broad analytical perspective. It explores the ritual methods, Agamic foundations, Shaiva practices, and their religious, spiritual, and social dimensions. The study investigates the ritual traditions followed in worship and the foundational beliefs associated with them. It analyzes how these ritual practices are structured and how they are carried out in accordance with Agamic principles. In particular, it examines how ritual systems and their procedural practices are organized based on Shaiva religious texts. Furthermore, the research highlights how, through ritualistic worship methods, various spiritual codes and symbolic expressions have been shaped within religious traditions. It also discusses how the ritual procedures established by Natyacharyas and other scholars have been structured within worship traditions. In addition, it explores how ritual and performance traditions were formed through the contributions of religious scholars and teachers. This study concludes that these ritual practices serve as foundational elements in developing art, religion, spirituality, and social expression.*

***KEYWORDS:*** *Sanmarga, Indian traditions, life philosophy, ritual practice, Agamic principles.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).
Publisher's Note: The views, opinions, and information presented in all publications are the sole responsibility of the respective authors and contributors, and do not necessarily reflect the views of Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors. Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors hereby disclaim any liability for any harm or damage to individuals or property arising from the implementation of ideas, methods, instructions, or products mentioned in the content.

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 7, Issue 03 (March -2026)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm07032026.03*

# சன்மதக் கடவுள்களின் ஊர்தி சின்னங்கள் மற்றும் பரதநாட்டிய ஹஸ்தப் பயன்பாடுகள்: ஆகமம், சாஸ்திரம் மற்றும் அபிநய மரபுகளின் ஓர் ஆய்வு

* **செல்வி.ஹிமார்த்திகா துளசிதாஸன்,** தற்காலிக உதவி விரிவுரையாளர் (நடன, நாடகத்துறை), சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

**ஆய்வுச் சுருக்கம் (Abstract)**

இந்த ஆய்வு சன்மத மரபில் உள்ள இந்துக் கடவுள்களின் ஊர்தி சின்னங்கள் மற்றும் அவற்றை பரதநாட்டிய ஹஸ்தப் பிரயோகங்கள் மூலம் எவ்வாறு வெளிப்படுத்துகின்றனர் என்பதைக் கருத்தாய்வு செய்கிறது. இந்த ஆய்வு சன்மதக் கடவுள்களின் ஊர்தி அடையாளங்களின் புராண, ஆகம, சாஸ்திர அடிப்படைகளையும், அவற்றின் கலை வடிவ மாற்றங்களையும் ஆராய்கிறது. குறிப்பாக பரதநாட்டியத்தில் பிரயோகங்கள் மற்றும் அவற்றின் அடையாளச் சின்ன அர்த்தங்கள் ஆய்வு பயன்படும் ஹஸ்தப் செய்யப்படுகின்றன. இந்த ஆய்வு இந்திய நடன சாஸ்திர மரபின் முக்கிய நூல்களில் கூறப்பட்டுள்ள ஹஸ்த அமைப்புகள் மற்றும் அவற்றின் தெய்வச் சின்ன பயன்பாடுகளை ஒப்பாய்வு செய்கிறது. குறிப்பாக நாட்டியசாஸ்திரம் எனும் நூல் மற்றும் அதனை இயற்றிய பரதமுனி அவர்களின் கோட்பாடுகள் ஆய்வின் தத்துவ அடிப்படையாகக் கொள்ளப்படுகின்றன. மேலும் ஹஸ்தங்களின் அபிநய விளக்கங்களில் முக்கிய பங்கு வகித்த பரதமுனி நந்திகேஸ்வரர் அவர்களின் பாரம்பரிய விளக்கங்களும் ஆய்வு செய்யப்படுகின்றன. இந்த ஆய்வு கலை, மதம், சின்னவியல் மற்றும் நடன வெளிப்பாடு ஆகிய துறைகளுக்கிடையேயான தொடர்பை வலுப்படுத்தும்.

**திறவுச் சொற்கள் –** சன்மதம், இந்துக் கடவுள்கள், ஊர்தி சின்னவியல், பரதநாட்டியம், ஹஸ்தப் பிரயோகம், நாட்டியசாஸ்திரம் ஆகம மரபு.

**ஆய்வின் நோக்கம்**

இந்த ஆய்வின் பிரதான நோக்கம் சன்மதக் கடவுள்களின் ஊர்தி சின்னங்கள் மற்றும் அவற்றை பரதநாட்டிய ஹஸ்தப் பிரயோகங்கள் மூலம் எவ்வாறு வெளிப்படுத்துகின்றனர் என்பதை கோட்பாட்டு மற்றும் நடைமுறை அடிப்படையில் ஆராய்வதாகும்.

**முக்கிய நோக்கங்கள்**

1. சன்மதக் கடவுள்களின் ஊர்திகளின் புராண, ஆகம மற்றும் சின்னவியல் அடையாளங்களை ஆய்வு செய்தல்.

2. பரதநாட்டியத்தில் பயன்படுத்தப்படும் ஹஸ்தங்களின் சாஸ்திர அடிப்படைகளை ஆராய்தல், குறிப்பாக நாட்டியசாஸ்திரம் நூலில் கூறப்படும் ஹஸ்தக் கோட்பாடுகளை ஆய்வு செய்தல்.

3. அபிநயதர்ப்பணம் நந்திகேஸ்வரர் நூலில் குறிப்பிடப்பட்டுள்ள தெய்வ அடையாள ஹஸ்தப் பயன்பாடுகளை ஆராய்தல்.

4. பாரம்பரிய ஹஸ்த கோட்பாடுகளை உருவாக்கிய பரதமுனி அவர்களின் நடனக் கோட்பாடுகள் மற்றும் அபிநய விளக்கங்களை உருவாக்கிய நந்திகேஸ்வரர் அவர்களின் கருத்துகளை ஒப்பாய்வு



தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

செய்தல்.

5. சன்மதக் கடவுள்களின் ஊர்திகளை வெளிப்படுத்த பயன்படுத்தப்படும் குறிப்பிட்ட ஹஸ்தப் பிரயோகங்களை அடையாளப்படுத்துதல்.

6.பாரம்பரிய சாஸ்திர ஹஸ்தப் பயன்பாடுகள் மற்றும் இன்றைய மேடை நடைமுறைகளுக்கிடையேயான தொடர்பை மதிப்பீடு செய்தல்.

7. நடனக் கல்வி மற்றும் கலைப் பயிற்சியில் தெய்வச் சின்ன ஹஸ்தப் பயன்பாட்டின் கல்வி மதிப்பை ஆய்வு செய்தல்.

**ஆய்வின் முக்கியத்துவம்**

1. மதச் சின்னங்கள் மற்றும் நடன வெளிப்பாட்டின் தொடர்பை விளக்குகிறது.

2. பரதநாட்டிய ஹஸ்தங்களின் அடையாள அர்த்தங்களை ஆழமாக விளக்குகிறது.

3. கலை மற்றும் சமய மரபுகளை ஒருங்கிணைக்கும் ஆய்வாக அமைகிறது.

4. நடனக் கல்வி மற்றும் ஆராய்ச்சி துறைக்கு புதிய கோட்பாட்டு அடித்தளம் தருகிறது.

5. சன்மத மரபின் கலை வெளிப்பாடுகளை ஆவணப்படுத்துகிறது.

**கருதுகோள்**

• சன்மதக் கடவுள்களின் ஊர்தி சின்னங்கள் பரதநாட்டிய ஹஸ்தப் பிரயோகங்களில் சாஸ்திர அடிப்படையில் அமைந்துள்ளன.

• ஹஸ்தப் பயன்பாடு தெய்வ அடையாளத்தை சின்னவியல் ரீதியாக துல்லியமாக வெளிப்படுத்துகிறது.

**ஆய்வுப் பிரச்சனை**

• சன்மதக் கடவுள்களின் ஊர்தி சின்னங்கள் பரதநாட்டியத்தில் எவ்வாறு சரியாக பிரதிபலிக்கப்படுகின்றன?

• ஹஸ்தப் பிரயோகங்கள் மூலம் தெய்வ அடையாளங்கள் எவ்வளவு துல்லியமாக வெளிப்படுகின்றன?

• பாரம்பரிய ஹஸ்த நூல்களில் கூறப்பட்ட கோட்பாடுகள் மற்றும் இன்றைய மேடை நடைமுறைகளுக்கு இடையே வேறுபாடுகள் உள்ளனவா?

**ஆய்வின் மூலங்கள்**

முதலாம் நிலை தரவு – வியாச முனிவரால் தொகுத்து வழங்கப்பட்ட பதிணெண் புராணங்கள் எனும் நூல் முதன்மை மூலமாக இதில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இரண்டாம் நிலை தரவு – சன்மதங்கள், இந்துக் கடவுள்களின் வாகனம் சார்ந்த நூல்கள், சஞ்சிகைகள், ஆய்வுக் கட்டுரைகள் மற்றும் இணைய வலைத்தளம் என்பன துணை மூலங்களாகப் பயன்படுகிறது.

**ஆய்வின் எல்லை**



தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

இவ்வாய்வானது புராண காலம் தொடக்கம் தற்காலம் வரை எழுந்த இந்துமத நூல்களின் அடிப்படையில் எல்லைப்படுத்தப்படுகின்றது.

**ஆய்வு அணுகுமுறை**

**இலக்கிய ஆய்வு, ஒப்பாய்வு முறை**

**சன்மதங்கள் பற்றிய விளக்கமும் அதன் வகைகளும்**

சைவம் முதலாக உள்ள வைதீக சமயங்களைப் பொதுவாக இந்து சமயம் என வழங்குகின்றனர். இந்து சமயத்தில் சன்மதங்களும் அடங்கியுள்ளன. சன்;மதம் என்பது வடமொழியில் சட் மதம் எனப் பிரிந்து ஆறு சமயங்கள் என பொருள்தரும். ஆறு சமயங்களும் காணாபத்யம், கௌமாரம், வைணவம், சௌரம், சாக்தம், சைவம் என்பனவாகும். இவற்றின் ஸ்தாபகராக ஆதிசங்கரர் விளங்குகின்றார். சங்கரர் இந்தியாவிலேயே கேரள மாநிலத்தில் காலடி என்ற கிராமத்தில் சிவகுரு, ஆரியாம்பிகை தம்பதியினருக்கு புத்திரனாய் தோன்றியவர். முப்பத்திரண்டே ஆண்டுகள் உயிர் வாழ்ந்த சங்கரர் இந்து மதத்திற்கு ஆற்றிய தொண்டுகள் அளப்பரியவை இமயம் முதல் குமரி வரை இருமுறை பயணம் செய்த சங்கரரின் திருவடிகள் படாத திருத்தலங்கள் இல்லை. அவரால் வெல்லப்படாத மதத் தலைவர்களும் இல்லை. தனி ஒரு ஞானியாக அத்வைத தத்துவத்தை பாரத காண்டம் முழுவதும் பரப்பிய பெருமை இவரையே சாரும். இந்தியா முழுவதும் பல்வேறு சமயக் கோட்பாடுகள் பரவிருந்தபோது திக்கு விஜயம் மேற்கொண்ட சங்கரர் பல சமயவாதிகளை தமது வாதத் திறமையினால் வென்று இந்து மதத்திற்கு இறுக்கமான அடித்தளம் ஒன்றை நிறுவினார். காஞ்சியில் வாழ்ந்த போது சங்கரர் அரும்பெரும் செயல் ஒன்றை ஆற்றினார். அக்கினி, குபேரன், பிரம்மன், மன்மதன், யமன், வருணன், வாயு போன்ற தேவர்களை வழிபட்டு வந்த மதங்கள் மொத்தம் 72 இருந்தன. சங்கரர் அவற்றிலிருந்து வேதவிரோதமான ஆசாரங்களை நீக்கினார். அத்துடன் சைவம், சாத்தம், வைணவம், கௌமாரம், காணாபத்தியம், சௌரம் என ஆறு பிரிவுகளை - சன் மதங்களை உருவாக்கி ஏனைய தெய்வங்கள் அனைத்தும் இந்த ஆறு பிரிவினுள் ஏதோ ஒரு பிரிவில் அடங்கிவிடும் என விளக்கினார். சங்கரர் இந்த மதங்களை உருவாக்கவில்லை சீர்திருத்தி ஒழுங்கு படுத்தினார். அவற்றை நாடெங்கும் பரப்புவதற்கு தமது சீடர்கள் அறுவரை அனுப்பினார். அதனால் சங்கரர் சன்மத ஸ்தாபகர் எனப்படுகிறார். இந்த அரும்பணியை சங்கரர் செய்ததால் இந்து சமயத்தைச் சேர்ந்தோரிடம் ஒருமைப்பாடு ஒற்றுமை ஏற்பட்டன. இதனால் இந்து மதம் தழைத்து வளர்வதற்கு வழி ஏற்பட்டது.

**சைவம் (சிவன்)**

சைவம் என்பது சிவபெருமானே எல்லா வல்லமையுள்ள முழுமுதற் கடவுள் என்னும் கொள்கையையுடைய பெருநெறி. இதைச் சிவநெறி என்றும் சைவநெறி என்றும் சைவநீதி என்றும் திருநெறி என்றும் சிவகதி என்றும் முத்திநெறி என்றும் பலவாறாகப் போற்றுவர். தேவதேவனாகிய சிவபெருமானைப் போன்று அவரை வழிபடுஞ் சமயமாகிய சைவமும் புனிதமானது. பழைமையானது, மேலானது, சைவசமயத்தின் மேன்மையை வேதங்கள், ஆகமங்கள், இதிகாசங்கள், புராணங்கள், தர்மசாஸ்திரங்கள், திருமுறைகள், சித்தாந்த சாஸ்திரங்கள், பண்டார



தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07032026.03*

சாஸ்திரங்கள், பத்ததிகள் பயபக்தியுடன் கூறுகின்றன. ஆகமங்கள் சைவசமயம் ஒன்றிற்கே உரியன. எனவேதான் சைவசமயிகளை ஆகமாந்தியர் என வழங்குகின்றனர். சிவவழிபாட்டில் அகவழிபாடு, புறவழிபாடு என இரு முறைகள் உள்ளன. அகவழிபாடு மானசீகமாக முனிவர்கள் முதலானோர் இருதய சுத்தத்தோடு இருந்து கண்டுவழிபடுதலாம். புறவழிபாடு ஆசாரசீலராயுள்ள எல்லோரும் சிவசின்னங்களாய திருநீறு, உருத்திராக்கம் தரித்து திருவைந்தெழுத்து என்னும் பஞ்சாட்சரமந்திரம் உச்சரித்து வழிபடுதலாம். சைவசமயத்தவரின் தத்துவக் கோட்பாட்டைச் சைவசித்தாந்தம் எனவழங்குவர். சைவசித்தாந்தம் என்னும் தத்துவக் கொள்கை தமிழ்;மக்களின் பேரறிவின் பெரும்பயனாகும்.

**வைணவம் (திருமால்)**

விஷ்ணு என்னும் திருமாலுக்குப் பிரபாவங் கொடுத்து வணங்குபவர் வைஷ்ணவர்கள். அவர்களை வைணவ மதத்தவர்கள் என குறிப்பிடுவர். வைணவம் என்பதற்குப் பாகவதம், பாஞ்சராத்திரம், சாத்துவம், ஏகாந்தியம் என்னும் பெயர்களும் உள்ளன. வைணவ ஆகமங்கள் கடவுளின் ஐந்து வகையான வடிவங்களைக் கூறுகின்றன. வைணவர்கள் விஷ்ணுவின் சின்னங்களான சங்கு சக்கரங்களைத் தங்கள் தோள்களில் முத்திரித்தல், நெற்றியிலும் நெஞ்சிலும் திருமண் சாத்துதல், தாசன் என்று பெயர் கொள்ளுதல் வேண்டும். 'சர்வம் விஷ்ணுமயம் ஜகத்' என்று உலகம் முழுவதும் விஷ்ணு மயமாகக் காண்பவர் வைணவர். விஷ்ணுவின் வாகனம் பட்சிராஜன் என வழங்கும் கருடன். விஷ்ணுவின் திருமேனியை இதிகாசங்களும், புராணங்களும், திவ்விய பிரபந்தங்களும் அழகாகக் கூறுகின்றன. சங்க இலக்கியங்களில் ஒன்றான பரிபாடலில்; திருமாலின் பெருமைகள் யாவும் விரிவாக அமைந்துள்ளன. விஷ்ணு பக்தியிற் சிறந்தவர்களைப் பாகவதர் என்று வழங்குவர். விஷ்ணு கோவில்கள் பழைய காலத்திற் காட்டுப் புறங்களில் இருந்தன. அவைகளுள் திருவரங்கம், திருப்பதி, திருமாலிருஞ்சோலை ஒருசில. விஷ்ணு பக்தர்கள் வைணவத் திருக்கோயில்களின் பெயரைக் கூறினாலேயே துயரம் நீங்கும் எனக்கருதினர். பாரத நாட்டில் பல்வேறிடங்களிலும் கோயில் கொண்டுள்ள ஸ்ரீமந்நாராயணனைப் பக்தர்கள் பற்பல திருநாமங்களால் வழங்கி நாட்டில் ஒருமைப்பாட்டைக் காண்கின்றார்கள்.

**சாக்தம் (சக்தி)**

சாக்தர் உலகத்தை மேலாகக்கொண்டு அதனூடு சக்தியின் வியாபகத்தை எங்கும் எல்லாவற்றிலும் காண்கின்றனர். சக்தி தான் தெய்வத்திற்கெல்லாந் தெய்வம், சக்தியில்லாமல் சிவதத்துவம் ஒன்றையும் இயக்கமாட்டாது என்று சாக்தர் கருதுவர். சக்தியின் பெருமையை மார்க்கண்டேய புராணம் கூறுகிறது. சக்தி இலக்குமியாயிருந்து உலகிற்கு வளத்தையும் செல்வத்தையும் கொடுக்கிறாள், சரஸ்வதியின் உருவிலிருந்து அறிவைக் கொடுக்கிறாள், உலகை அழிக்கும் போது மகாமாரி உருவெடுக்கிறாள். தேவி சைவசமயத்தவளாகவே பெரும்பாலும் அமைகின்றாள். மகிடாசூரனை மாய்த்து உலகத்திற்கு மலர்ச்சியைக் கொடுத்தருளும் புரிந்தவள் மகிடாசுரமத்தினி. இவளை சண்டிகா, கார்த்யாயினி எனவும் வழங்குவர். சன்மதங்களில் எங்கும் தேவிக்கு சிறப்பிடம்

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07032026.03*

உண்டு. சக்தி வழிபாடு மிகப்பழைய காலத்திலே தமிழரிடையே தாய்த்; தெய்வ வழிபாடாக நிலவி வந்தது. தமிழ்நாட்டில் கொற்றவை வழிபாடு மிகப்பழமை வாய்ந்தது. இற்றைக்கு 2700 ஆண்டுகளுக்கு முற்பட்டவையாகக் கருதப்படும் ஆதித்த நல்லூர் புதைபொருள்களில் பெரியவயிறும் முலைகளும் உள்ள தாய் தெய்வத்திருவுருவம் கிடைத்துள்ளது. ஆறுகளைப் பெண்களாக கருதி தெய்வங்களாக போற்றும் வழக்கம் அக்காலத்தில் நிலவியது. முற்காலத்தில் காடும் காடு சார்ந்த நிலமும் தெய்வத்தின் உறைவிடமாக கருதப்பட்டன. சக்தியின் பெருமையைப் பிற்காலப்புராணங்கள் போற்றுகின்றன.

**காணாபத்யம் (கணபதி)**

ஆதிசங்கரர் வகுத்த சன்மதங்களுள் ஒன்று காணாபத்யமாகும். காணாபத்ய மதத்தின் கொள்கையானது கணபதியே முழுமுதற் கடவுள் என்பதாகும். அவர் ஐந்தொழில்களை புரிபவர். சத், சித் ஆனந்தம் என்ற நிலைகளில் உள்ளவராய் சச்சிதானந்தம் என்ற பெயரை உடையவர். தனிப்பெருங்கடவுளான விநாயகர் பெருமான் ஓங்கார வடிவமானவர். தமிழ்நாட்டுக்குரிய சிறப்பான தெய்வம் கணபதி அங்கு அவர் பிள்ளையார் என்று பெருமை பெறுகின்றார். மரங்களின் கீழும் ஆற்றங்கரையிலும் வீட்டிலிருந்தும் அருள் புரிகின்றார். விநாயகர் பற்றிய தெளிவான குறிப்புகள் வேதங்களில் காணப்படவில்லை. எனினும் இருக்கு வேதத்தில் கணானாம் த்வாம் கணபதிம் என்றவாறு கணபதி என்ற சொல் காணப்படுகின்றது. பிரம்மவைவர்த்தன புராணத்தில் விநாயகர் கிருஷ்ணனுடைய அவதாரம் என்று கூறப்படுகின்றது. வராகபுராணம், வாமனம் மகாஸ்காந்தம், அக்கினிபுராணம், பத்ம புராணம், கருடபுராணம் என்பவைகளில் விநாயகர் அவதாரம் பற்றி விரிவாக கூறப்பட்டுள்ளது. மேலும் மகாபாரதம் வியாசர் சொல்ல விநாயகர் எழுதினார் என்பது வரலாறு. இந்த வகையில் ஒன்பதாம் நூற்றாண்டில் இருந்து 12 ஆம் நூற்றாண்டு வரை உள்ள நூல்களில் விநாயக வணக்கச் செய்யுள்கள் காணப்படுகின்றன. விநாயகர் தத்துவம், வழிபாடு என்பன காணாபத்திய நெறிக்கே சிறப்பானது எனினும் இன்று எல்லா நெறியினராலும் வழிபடப்பட்டு அருள் செய்கின்றவராக விநாயகர் விளங்குகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**கௌமாரம் (முருகன்)**

கௌமாரம் என்னும் சமயத்திற்குரிய கடவுள் குமாரன் என்னும் முருகனாவார். குமாரன் ஆறுவகையான சமயங்களையும் ஊடுருவி நிற்பவர். அவருக்கு திருமுகங்கள் ஆறு, அவரே முழுமுதற் பொருள் என்று கௌமார சமயம் கூறுகின்றது. குமார தந்திரம் எனும் ஆகமநூல் முழுவதும் முருகனின் வரலாறு, பிரதிட்டை முறை, விழா, பூசை, விரதம் முதலியவற்றை முறையாக கூறுகின்றது. இதிகாசங்களை போலவே புராணங்கள் பலவும் முருகன் பெருமையை கூறுகின்றன. ஆறுமுகப்பெருமான் தமது விசுவரூபம் என்னும் திருப்பெருவடிவத்தை சூரனுக்கு யுத்தகளத்தில் காட்டியருளிய அருமையைக் கந்தபுராணம் அழகாக காட்டுகின்றது. சூரபத்மன,; சிங்கமுகன், அதிசூரன.; பானுகோபன் முதலிய அசுரர்களை முருகன் வென்றார் நம்முள் உண்டாகும் அசுரத்தன்மைகளை வென்றால் நாம் முருகபக்தராவோம். முருகன் தமிழ்நாட்டுத் தெய்வம்.


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

தொல்காப்பியத்தை அடுத்து வந்த சங்க இலக்கியங்களில் எட்டுத்தொகை பத்துப்பாட்டு என்பன இருபெரும் தொகை நூல்கள், இவற்றுள் எட்டுத்தொகையுள் பரிபாடல் நூலிலும், பத்துப்பாட்டுள் திருமுருகாற்றுப்படை எனும் தனிப் பாவிலும் முருகன் பெருமை பாடப்பட்டுள்ளது. முருகவணக்கம் நெடுங்காலமாக தமிழ்நாட்டில் நிலவி வந்தது என்பதற்கு இன்று நிலவும் பழைய கோயில்களும், பழைய இலக்கியங்களும், புதைபொருள் ஆராய்ச்சியாளரின் கண்டுபிடிப்புகளும் சான்று வகிக்கின்றன.

**சௌரம் (சூரியன்)**

சூரியனைப் பரம்பொருளாகக் கொண்டு வழிபடும் சமயமே சௌரமாகும். இது சன் மதங்களுள் ஒன்றாகும். சூரியன் இன்றேல் உலகில் உயிர் இல்லை. அவருடைய சக்தியில் தான் பயிர்கள் வளர்கின்றன, ஜீவராசிகள் உயிர் வாழுகின்றன. உலகுக்கு உயிருக்கு இன்றியமையாத சூரியனை முழுமுதற் கடவுளாக வழிபட்டு வரும் மதத்திற்கு சௌரம் என்று பெயர். ரிக் வேதம் சூரியனை மூன்றுவித அக்கினிகளில் ஒருவனாக விவரிக்கின்றது. சாமவேதம் உலகம் முழுவதும் ஒளிர்பவன் அவன் என்று போற்றுகின்றது. சதபத பிராமணம் சூரியனை சோதிப்பிழம்பு என்றும் பொன்னாரங்களாலான வட்டம் என்றும் குறிக்கின்றது. சூரிய உபாசனையைப் பவிஷ்யபுராணம், பிரம்மபுராணம், வராகபுராணம், மத்ஸ்யபுராணம், அக்கினிபுராணம், கருடபுராணம், பவிஷ்யோத்ரபுராணம் காளிகாபுராணம், மார்கண்டேய புராணம் ஆகிய பழம்பெரும் நூல்கள் விதவிதமாக விவரிக்கின்றன. தமிழ்நாட்டிலே சூரியனுக்கு தனிஆலயம் நிர்ணயிக்கப்பட்டிருப்பது சூரியனார் கோயில் என்ற ஒரு தளத்தில் தான். இது தஞ்சை மாவட்டத்திலே திருமங்கலக் குடியில் உள்ளது கர்ப்பக்கிரகத்திலிருந்து சூரியன் மேற்குநோக்கி காட்சிதருகின்றார.; கோயிலில் குதிரையே துவஜஸ்தம்பமாக அமைக்கப்பட்டிருக்கின்றது. சுவாமிக்குச் சிவசூரியநாராயணன் என்று பெயர். இத்தளத்திலே சூரியன் பிரணவஸ்ய ரூபமாகவும் மும்மூர்த்திகளாகவும் விளங்கும் ஈசனை லிங்கமாக ஸ்தாபித்துப் பூஜை செய்து கொண்டிருப்பதாக சொல்லப்படுகின்றது.

**இந்துக் கடவுள்களின் வாகனங்கள்**

மனித இயக்கத்திற்கு வாகனங்கள் எந்த அளவிற்கு வேண்டப்படுகின்றனவோ அந்த அளவிற்கு கோவில் இயக்கத்திற்கு குறிப்பாகத் தெய்வங்களின் இயக்கத்திற்கும் கோயில் வாகனங்கள் இன்றியமையாதனவாக வேண்டப்படுகின்றன. சமஸ்கிருத மொழிச் சொல்லான “வாஹன்” என்பதன் பொருள் “சுமத்தல்” அல்லது “ஏந்துதல்;” ஆகும். தொன்மையான இந்து நூல்களில், இறைவனின் சிலைகள் பற்றிய விவரணங்களை வர்ணிக்கும் போது, ஒவ்வொரு மூர்த்திக்கும் ஒவ்வொரு வாகனம் சிறப்பானதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவர்கள் தமது வாகனங்களில் சென்றே பல்வேறு அற்புதங்களை நிகழ்த்தியுள்ளதாகவும் புராணங்கள் குறிப்பிடுகின்றன. அதாவது இந்துக் கடவுள்கள் நல்லனவற்றைக் காத்துத் தீயவற்றை இல்லாதழிப்பதற்காக யுகங்கள் தோறும் பல்வேறு திருஅவதாரங்களை எடுத்துள்ளனர். அவ் அவதாரங்களில் தீய சக்திகளை அடக்கி, அதற்கு நல்லறிவு புகட்டி அதற்கு விலங்குரு கொடுத்து தமது வாகனமாக ஆட்கொண்டுள்ளனர். இவ்வாகனங்கள் மூலம் பல்வேறு தத்துவங்களையும், நற்சிந்தனைகளையும் மானிடர் மத்தியில்


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07032026.03*

விதைத்துள்ளனர். இவ்வாகனங்கள் பற்றிய ஒவ்வொரு கதைகளும் அதன் கரு உள்ளடங்கலாகப் பதினெண் புராணங்களில் சிறப்பாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. வடமொழிக் கிரந்தத்தில் எழுதப்பட்டிருக்கும் ஸ்ரீதத்துவநிதி சிற்பரத்னம், காஸ்யப சிற்ப சாஸ்திரம், மான சாஸ்திரம் போன்ற சிற்பக்கலை நூல்கள் தஞ்சை சரசுவதி மஹால் நூலகத்தினரால் வெளியிடப்பட்டுள்ளன. இவற்றில் இந்துக் கடவுள்களின் ஊர்தி வடிவாக்க நுட்பமுறைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. சங்க இலக்கியம், சிலப்பதிகாரம், திருமுறைகள், காப்பியங்களில் இறைவனுக்குரிய வாகனங்கள் பற்றிய இலக்கியச் சான்றுகள் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக பக்தி நெறியினைப் பண்ணமைந்த பாடல்களால் நாடெங்கும் தலயாத்திரை செய்து பரப்பிய அப்பர், சம்மந்தர், சுந்தரர் ஆகியோர்களின் காலங்கட்கு முன்பே தெய்வங்கள் வாகனங்களில் உலா வரும் சிறப்பு இருந்துள்ளதாக அவர்களின் தேவாரப் பதிகங்கள் தெளிவுபடுத்துகின்றன.

இந்துக் கடவுள்களுக்கான வாகனங்களை வேத, புராண, ஆகம மற்றும் சமய நூல்களை அடிப்படையாகக் கொண்டு நோக்குவோம்.

கடவுள்- வாகனம்

1. சிவபெருமான் - நந்தி
2. சனீஸ்வரன்- காகம்
3. திருமால் - கருடன்
4. மன்மதன்,ரதி - கிளி
5. முருகன் - மயில்
6. குபேரன் - மனிதன்
7. பிரம்மா - அன்னம்
8. நிருத்தி - பேய்
9. விநாயகர் - மூஷிகம்
10. காளி - புலி
11. வைரவர் - நாய்
12. வாயுபகவான் - மான்
13. துர்க்கை - சிங்கம்
14. எமன் - எருமைக்கிடா
15. பார்வதி - அன்னம்
16. சந்திரன் - கலைமான்
17. ஐயப்பன் - புலி
18. பூமாதேவி - பசு


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 7, Issue 03 (March -2026)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm07032026.03*

19. லட்சுமி -ஆந்தை
20. காளத்திரி - கழுதை
21. விஷ்னு -ஷேஷம்
22. கேது - மீன்
23. வருணன் -மகரம்
24. மானசா - பாம்பு
25. அக்னி - ஆட்டுகிடா
26. சண்டிதேவி - பன்றி
27. சூரியன் - ஏழுகுதிரைகள்
28. ராகு, ஷஷ்டி - பூனை
29. இந்திரன் - ஐராவதம்
30. இராமன் – ஹனுமான்

**சன்மதக் கடவுள்களுக்கான வாகனங்கள்**

**சிவனின் வாகனங்கள் (நந்தி)**

சிவபெருமானுக்குரிய வாகனங்களுள் முதன்மை பெற்று விளங்குவது நந்திவாகனமாகும். நந்தி சிவனின் வாகனமாக மட்டுமன்றி சிவகணங்களின் தலைவனாகவும், கைலாயத்தின் வாயிற்காவலனாகவும் திகழ்கின்றது. இதனை அதிகார நந்தி எனவும் அழைப்பர். இந்து சமயப் புராணங்களின்படி ரிஷப வாகனம் சிவபெருமான் எழுந்தருளும் வாகனங்களில் ஒன்றாகக் குறிப்பிடப்படுகின்றது. மரணத்தின் அதிபதியான எமனும் சிவனின் ஓர் வாகனமாகும். எம வாகனத்தில் சிவபெருமான் ஊர்வலம் வருதலை ‘எமவாகன சேவை’ என்று அழைக்கின்றனர். திருவிழாக் காலஙகளின் போது சிவபெருமான் சோமஸ்கந்த மூர்த்தம் அல்லது உமாமகேஸ்வர கோலங்களில் எழுந்தரும் வாகனங்களில் ஒன்றாக கைலாச வாகனம் குறிப்பிடப்படுகின்றது. இது ராவண வாகனம் எனவும் அழைக்கப்படுகிறது. சிவகணங்களில் ஒன்றான பூத கணங்கள் சிவனைப் போற்றி வழிபடுவதைக் குறிப்பதற்காக சிவபெருமான் பூதவாகனத்தில் ஊர்வலம் செல்கின்றார். சிவபெருமானைத் தாங்கிவருகின்ற பூதரை மகாகாயன் அழைக்கின்றனர். கேட்டதைத் தரக்கூடிய வல்லமை கொண்ட கற்பக விருட்சமும் சிவனின் வாகனமாகக் கொள்ளப்படுகின்றது. இதனை விருட்ச வாகனம் என்றும் கூறுவர். மேலும் குதிரை, யானை, மான், சிம்மம், யாளி, காமதேனு ஆகிய வாகனங்களில் உமையும் சிவனும் ஒருங்கேயமர்ந்து திருவிழாக்காலங்களில் உலா வருவதும் வழக்கமாக உள்ளது.

**திருமாலின் வாகனங்கள் (கருடன்)**

காத்தல் கடவுளாகிய மகாவிஷ்னுவின் மூல வாகனமாக விளங்குவது சக்தி வாய்ந்த கருடப் பறவையாகும். கருடனைப் “பெரிய திருவடி” என்கின்றனர். மேலும் கருடாழ்வார் விஷ்னுப்பிரியன், வைநதேயன், சுபர்ணன், பட்சிராஜன் போன்ற பெயர்களும் கருடனுக்கு உண்டு. கருட


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 7, Issue 03 (March -2026)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm07032026.03*

வாகனத்தில் திருமாலைப் பார்ப்பவர்களுக்கு மறுபிறவியே இல்லை என்பது வைணவர்களின் நம்பிக்கையாகும். புராணங்களில் வி~;னு பாம்புப்படுக்கையில் படுத்திருப்பதாகக் குறிப்பிடப்படுவதற்கிணங்க ஆதிN~ட நாகமும் அவரது வாகனங்களுள் ஒன்றாகின்றது. இதனை நாக வாகனம் எனவும் அழைப்பர். திருவிழாக் காலங்களில் திருமால் உலாப்போகும் வாகனங்களில் அனுமந்த வாகனமும் ஒன்றாகும். வைணவ சமயத்தில் அனுமனை சிறிய திருவடி என்கின்றனர். திருமாலின் ராம அவதாரத்தில் ராமனின் சிறந்த பக்தனாக அனுமன் குறிப்பிடப்படுகின்றான். ஹம்ஸ வாகனமும் திருமாலுக்குரிய வாகனமாகக் கருதப்படுகி;றது.

ஹம்ஸம் என்றால் அன்னம் என்பது பொருள். அறிவுக்கும், ஞானத்திற்கும் குறிப்பீடாக விளங்குவது அன்னமாகும். அறிவையும் தூய்மையையும், ஆராய்ந்து தெளியும் திறனையும் குறிக்கும் வகையில் ஹம்ஸ வாகனத்தில் ஸ்ரீநம்பெருமாள் உலாவருகின்றார். தஞ்சை நீலமேகப் பெருமாள் கோயில், மணிக்குன்னப் பெருமாள் கோயில், வீரநரசிம்மர் கோயில் ஆகிய வைணவக் கோயில்களில் வேனிற்கால உற்சவங்களில் திருமால், தாயார் இலக்குமியுடன் வீதியுலா வருவதற்கு ஒவ்வொரு நாளுக்கும் ஒரு வாகனத்தினை நயந்துள்ளனர்.

**சக்தியின் வாகனங்கள் (சிங்கம்)**

அம்மனுக்குரிய வாகனங்களுள் முதன்மை பெற்று விளங்குவது சிங்க வாகனமாகும். இதனால் அம்பாள் சிம்மவாஹினி எனப் போற்றப்படுகிறாள். தமிழகத்தில் பழங்காலம் முதலே வணங்கப்படும் தெய்வம் கொற்றவையாகும். எதிரிகளைக் கொல்லும் போர்த்தெய்வமான கொற்றவையின் வாகனம் புலியாகும். இவளைப் பராசக்தியான அம்பிகையின் வடிவம் என்றே கருதுகின்றனர். சிவபெருமான் ஆடிய தாண்டவத்தில் இருந்து துர்க்கையின் அம்சமான ஒன்பது தேவியர் தோன்றினர் என்றும் அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வாகனம் உள்ளது என்றும் இவர்களே நவராத்திரி தேவியர் என்றும் புராணங்கள் கூறுகின்றன. அதன்படி, சைலபுத்திரி காளை மாட்டினையும், பிரம்மச்சாரினி தேவி வெள்ளை ஆட்டினையும், சித்திரகாண்டா தேவி புலியினையும், கூஷ்மாண்டாதேவி வேங்கையையும், ஸ்கந்தமாதா காத்யாயினி சிங்கத்தையும், காளராத்தி கழுதையையும், கௌரிதேவி இடபத்தையும், சித்தி தாத்ரி தாமரை மலரினையும் வாகனமாகக் கொண்டுள்ளனர். மதுரை மீனாட்சியம்மன் கோயில் சித்திரைத் திருவிழாவில் இரண்டாம் நாள் அன்னவாகனத்திலும், மூன்றாம் நாள் காமதேனு வாகனத்திலும், நான்காம் நாள் தங்கப் பல்லாக்கிலும், ஐந்தாம் நாள் தங்கக்குதிரை வாகனத்திலும், ஆறாம் நாள் ரிஷப வாகனத்திலும், ஏழாம் நாள் யாழி சிம்மம் வாகனத்திலும் எழுந்தருளி வீதியுலா வருவதாக மீனாட்சி அம்மன் கோயில் தலவரலாறு குறிப்பிடுகின்றது. மேலும், திருச்சி சமயபுரம் மாரியம்மன் கோயிலில் அம்மன் பூதவாகனத்தில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலிக்கின்றார்.

**முருகனின் வாகனங்கள் (மயில்)**

அழகன் முருகனின் மூல வாகனமாக விளங்குவது மயிலாகும். இதனை சிகி எனவும் அழைப்பர். மயிலை வாகனமாகக் கொண்டதால் மயில் வாகனன், சிகி வாகனன், மயூர வாகனன் என முருகப்

Tamilmanam



தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

பெருமான் பலவாறாக வர்ணிக்கப்படுகின்றார். முருகப் பெருமானின் சரித்திரத்தில் மூன்று மயில்கள் வாகனமாகக் குறிப்பி;டப்பட்டுள்ளது. அவை மந்திர மயில், தேவமயில்;, அசுரமயில் என்பனவாகும். மாங்கனி வேண்டி உலகைச் சுற்றிவந்த முருகனின் வாகனமான மயில் மந்திரமயில் என்றும், சூரபத்மனிடம் போர்புரியச் செல்வதற்காக அவரது மயில் வாகனமாக தேவேந்திரன் உருமாறினான் அம்மயில் தேவமயில் என்றும்;, சூரனின் அகங்காரம் அழித்து அவனை இருகூறாக்கியதில் உருவான மயில் அசுரமயில் எனவும் புராணச் செய்திகள் குறிப்பிடுகின்றது. பண்டைக்காலத் தமிழர்கள் முருகனது ஊர்த்தியாக யானையைக் குறிப்பிட்டுள்ளனர். சங்க நூல்களான குறுந்தொகை, பதிற்றுப்பத்து, புறநானூறு முதலியன முருகனது வாகனமாக யானையையே குறிப்பிடுகின்றன. எடுத்துக்காட்டாக "பாயிரும் பனிக்கடல் பார்துகள் படப்புக்குச் சேயுயர், பிணிமுகம் ஊர்ந்த மருளக்கி" எனப் பரிபாடலிலும், "ஒன்சுடர் ஓடைக் களிறு" எனக் குன்றம்பூதனாரின் பாடலிலும் குறிப்பிடப்பட்டிருப்பதைக் காணலாம். மேலும், ஹரிகேசன் என்ற அரக்கனிடம் போரிட்டு வலிமையிழந்த இந்திரன் சுவாமிமலை சென்று முருகனை வேண்டி இழந்த பலத்தை மீளப்பெற்றதற்கு நன்றிக்கடனாக தனது ஐராவதம் எனும் யானையை முருகனுக்கு வாகனமாக அளித்ததாகவும் புராணங்கள் கூறுகின்றன. ஒருசமயம் நாரதர் வேள்வியின் போது மந்திரங்களைத் தவறாக உச்சரித்ததன் விளைவாக வேள்வித்தீயிலிருந்து சிவப்பு நிறமான முரட்டு ஆட்டுக்கடா ஒன்று தோன்றியது. அது விண்ணுலகிலும் மண்ணுலகிலும் பாய்ந்து பெருமழிவை ஏற்படுத்தியது. அவ்வாட்டினை முருகப்பெருமான் அடக்கித்தன் வாகனமாக்கிக் கொண்டதாக கந்தபுராணம் குறிப்பிடுகிறது. அன்று முதல் முருகன் மேஷவாகனர் என்றும் போற்றப்படுகிறார். இவைதவிர இடபம், குதிரை, சூரன் என்பனவும் திருவிழாக் காலங்களில் முருகப்பெருமான் உலாப்போகும் வாகனங்களாகக் அமைகின்றன.

**விநாயகரின் வாகனங்கள் (மூஷிகம்)**

சிவகுமாரருள் மூத்தவரான விநாயகப் பெருமானின் உன்னத வாகனமாகத் திகழ்வது மூ~pகமாகும். விநாயகர் பல்வேறு யுகங்களில் வெவ்வேறு வாகனங்களில் அருள் புரிந்ததாகப் புராணங்கள் குறிப்பிடுகின்றது. அந்த வகையில் துவாபரயுகத்தில் விநாயகரின் வாகனமாக மூ~pகம் விளங்கியுள்ளது. கிருத யுகத்தில் விநாயகருக்கு வாகனமாக வீரத்தைக் காட்டும் சிங்கம் அமைந்துள்ளது. சிங்கவாகனத்துடன் கூடிய பஞ்சமுக விநாயகரைத் திருவொற்றியூரிலும், சிங்கவாகனத்தின் மீதமர்ந்த பஞ்சமுக விநாயகரை திருநாகைக்காரோணத்திலும் காணலாம்.

திரேதா யுகத்தில் விநாயகரின் வாகனமாக மயில் இருந்துள்ளது. மயில் மீதமர்ந்து மயில் வாகனராக விநாயகர் கமலாசூரனை வென்றதாகக் கூறப்படுகின்றது. மகாராஷ்டிராவில் மோர்காம் என்ற தலத்தில் விநாயகர் மயில் வாகனத்தில் காட்சி தருவதால் மயூர விநாயகர் எனப் போற்றப்படுகின்றார். மேலும், பாண்டிச்சேரி மணக்குள ஆலய சுதைச் சிற்பத்திலும், திருவானைக்கா அகிலாண்டேஸ்வரி ஆலயத்திலுள்ள ஓவியத்திலும் விநாயகர் மயில் வாகனத்துடன் காட்சி தருகின்றார். கலியுகத்தில் விநாயகரின் வாகனமாகக் குதிரை குறிப்பிடப்படுகின்றது. கடலூர் மாவட்டம், சென்னப்ப நாயக்கன் பாளயத்திலுள்ள



தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

மலையாண்டவர் கோயிலில் குதிரை வாகன விநாயகரைத் தரிசிக்கலாம். மேலும், பெரம்பலூர் மாவட்டத்திலுள்ள மல்ல பிள்ளையாரின் வாகனமாக யானை அமைந்துள்ளது. சுசீந்திரம் தாணுமாலயன் கோயிலிலும், நெல்லை காந்திமதி ஆலய விநாயகர் சந்நிதியிலும் காளை வாகனமாகக் காட்சியளிக்கின்றது. காசிப முனிவரின் புதல்வர்களுக்குப் பல வடிவங்களில் காட்சி தந்த விநாயகர் மான் வாகனராகவும் காட்சியளித்தார் என்று விநாயக புராணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. சயாம் நாட்டில் ஆமை வாகனம் விநாயகருக்குரியதாகக் காணப்படுகின்றது. இந்தோனே~pயாவிலும் ஆமை மீது நிற்கும் திருக்கோல விநாயகர் வணங்கப்பட்டு வருகின்றார்.

**சூரியபகவானின் வாகனம் (ஏழு குதிரைகள்)**

சன்மதக் கடவுளர்களுள் சூரியன் தவிர்ந்த ஐவரும் கடவுள் என்ற உயர்நிலையிலும், அவர்களிலிருந்து ஒருபடி கீழிறங்கிய நிலையில் சூரிய பகவானும் காணப்படுகின்றார். அக்கடவுள்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பல வாகனங்கள் காணப்படுகின்ற போதிலும் சூரிய பகவானுக்கு ஏழு குதிரைகள் பூட்டப்பட்ட தேர் மட்டுமே வாகனமாகப் புராணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனைச் "சப்தாஸ்வம்"என்று அழைப்பர். சூரிய பகவானின் ஏழு குதிரைகளின் பெயர்களும் பின்வருமாறு:

ஜெயா, அஜயா, வெற்றி, ஜீதா பிராணா, ,ஜீதா கிராம, மனோஜபா, ஜீதா க்ரோதா

இச் சூரியனின் வாகனமாகிய ஏழு குதிரைகள் பூட்டப்பட்ட தேரைச் செலுத்துபவனாக பெரியதிருவடி என்று போற்றப்படும் கருடனின் சகோதரனான அருணன் குறிப்பிடப்படுகின்றான். ஒரிசா மானிலத்திலுள்ள கொனார்க் சூரிய கோயில் தேர்வடிவிலும், அதனை ஏழு குதிரைகள் இழுத்துச் செல்வது போலவும் உருவாக்கப்பட்டுள்ளது.

**பரதநாட்டிய ஹஸ்தங்கள் ஒரு பார்வை**

**ஹஸ்த இலட்சணம்**

முத்திரை என்பது பண்பாட்டு நாட்டியங்களின் அடிப்படையில் நடனமாடும் போது கைகள் அல்லது அவயவங்களின் மூலம் செய்யும் பாவனைகள் எனலாம் "முதஹர்ஷனே" என்ற வேர்ச்சொல்லில் இருந்து முத்திரை என்ற சொல் தோன்றியதாக சிற்ப ஆகம நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. இம் முத்திரைகளை சமஸ்கிருதத்தில் "ஹஸ்தங்கள்" என சிறப்பாக அழைக்கப்படுகின்றது கைகளிலுள்ள விரல்களினால் பல்வேறு நிலைகளாலும், அசைவுகளாலும் பொருள்பட அபிநயித்து உணர்ச்சிகளையும் எண்ணக்கருக்களையும் வெளிப்படுத்துவதே ஹஸ்தங்கள் ஆகும்.

"முத்திரைகள் மகிழ்ச்சிக்குரியதெனக் குறிக்கும் 'முஹகாரமும்' தேவர்களுக்கும் மகிழ்ச்சியை தர வல்லதெனக் குறிக்கும் 'துத்ராஹகாரமும்' உள்ள நல்ல பொருட்செறிவைக் குறிப்பதனால் "முத்ரா" என்று சொல்லப்படுகின்றது நாட்டியத்தில் மட்டுமன்றி ஆகமங்களிலும், யோகங்களிலும், மருத்துவங்களிலும் முத்திரைகளைப் பயன்படுத்துகின்றனர்" ஒரு பொருளின் தோற்றம், உருவம், குறி, தன்மை என்பவற்றை கைகளினால் விளக்கும் இம் முத்திரைகளின் பயன்பாடு பரத நாட்டியத்தில் இன்றியமையாததாகக் காணப்படுகின்றது. இதனால் இம் முத்திரைகள் ஹஸ்தாபிநயம் என்று அழைக்கப்படுகின்றது. இவை பரதமுனிவர் காலத்திற்கு முன்னே



தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

வளர்ச்சியடைந்திருக்க வேண்டும். அதாவது மனிதன் தொடக்க காலத்தில் தான் அறிந்த பொருட்களை அல்லது விடயங்களைப் பிறர் அறிந்துகொள்ள வேண்டுமென தனது இருகைகளின் துணைகொண்டு சைகைகளாகக் காட்சிப்படுத்தினான். தொடக்கத்தில் அவனால் காணப்பெற்ற பொருட்கள் அளவில் குறைந்தும், செயற்பாடுகள் மிகக் குறுகியவையாகவும் இருந்ததால் இரு கைகளின் துணைகொண்டு எதனையும் உணர்த்த முடிந்தது. அதனால் காணப்பெற்ற விடயங்கள் காலப்போக்கில் பலவாயின. அதனால் தனது இருகைகளின் செயற்பாடுகளை இடம் நோக்கியும், பொருள் நோக்கியும், சூழல் நோக்கியும் பலவாறாகக் காட்ட வேண்டிய தேவையேற்பட்டது. இவற்றைக் கைக்குறியீடுகள் என்றனர். இக்குறியீடுகளே பிற்காலத்தில் பரத நாட்டியத்தில் முத்திரைகளாக உருப்பெற்றது. நாட்டியம் அமைப்பதற்கும் ஆடுவதற்கும் மூல இலக்கணமாய் விளங்கும் ஹஸ்தங்களை நன்கு அறிந்து ஆடும் திறனைப் பெற்றுவிட்டால் மனதில் நினைத்த எந்த விதமான எண்ணத்தையும் வெளிப்படுத்த முடிவதோடு பார்வையாளர்கள் ரசித்திட ஓர் உயர்ந்த கருவியாகவும் அமைவதைக் காணலாம்.

**அபிநய தர்ப்பணத்திலுள்ள சன்மதக் கடவுள்கள் மற்றும் அவர்களது வாகனங்களுக்கான ஹஸ்த பிரயோகங்கள்.**

'ஆங்கிகம், புவனம்.....' எனும் சிவனின் ஸ்லோகத்தோடு தொடங்கும் அபிநய தர்ப்பணம் நந்திகேஸ்வரரால் வடமொழியில் எழுதப்பட்ட ஒரு நூலாகும். அபிநய தர்ப்பணம் என்றால் 'அபிநயத்தின் கண்ணாடி' என்று பொருள்படும். இதற்கமைய அபிநயமே இந்நூலில் சிறப்பாக எடுத்துக்காட்டப்படுகின்றது. 324 ஸ்லோகங்களைக் கொண்ட இந்நூல் 10ம் நூற்றாண்டளவில் எழுதப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. பரதநாட்டிய முத்திரைகள் பற்றிப் பல நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் இன்று பல்கலைக்கழகங்களிலும், பாடசாலைகளிலும், தனியார் நடனப் பள்ளிகளிலும் பயில் நிலையில் காணப்படுவது அபிநய தர்ப்பணத்தினை அடிப்படையாகக் கொண்ட ஹஸ்தப் பிரயோகங்களேயாகும். இதில் இருபத்தெட்டு அஸம்யுத ஹஸ்தங்களும், இருபத்தி மூன்று ஸம்யுத ஹஸ்தங்களும் அவற்றிற்கான ஸ்லோகம், விநியோகங்களுடன் சிறந்த முறையில் விளக்கப்பட்டுள்ளது. அத்தோடு ஸம்யுத, அஸம்யுத ஹஸ்தங்களை அடிப்படையாகக் வைத்துக் கொண்டு மேலும் பல ஹஸ்தங்கள் தொகுக்கப்பட்டுள்ளது. அவை பதினான்கு தேவஹஸ்தங்கள், தசாவதார ஹஸ்தங்கள், நான்கு ஜாதி ஹஸ்தங்கள், பதினொரு பாந்தவ்ய ஹஸ்தங்கள், நவக்கிரஹ ஹஸ்தங்கள் என்பனவாகும். இவற்றிற்கு மேலதிகமாக அபிநய தர்ப்பண நூலின் பிற்சேர்ப்புப் பகுதியில் பறவைகள், விலங்குகள், நாயக நாயகிகள்;, அரசர்கள், நவரசங்கள், சிவகணங்கள் மற்றும் தேவியர்களுக்கான ஹஸ்தப் பிரயோகங்களும் ஸ்லோகத்துடன் கூறப்பட்டுள்ளது. மேற்குறிப்பிடப்பட்ட அபிநய தர்ப்பண நூலின் ஹஸ்த வகைகளும் சன்மதக் கடவுளர்களையும், அவர்களுக்கான வாகனங்களையும் பரத நாட்டியத்தில் அபிநயித்துக் காட்டுவதற்கான ஹஸ்தங்கள் அமையப்பெற்றுள்ளன. அவற்றினை விரிவாக நோக்குவோமாயின், கடவுளர்களை அபிநயித்துக் காட்டுவதற்கான முத்திரைகளைக் கொண்டுள்ள தேவஹஸ்தங்கள்


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

எனும் பிரிவில் சன்மதக் கடவுளர்களும் சிவபெருமான், விஷ்னு, விநாயகர், முருகன் போன்றோருக்கான ஹஸ்தப் பிரயோகங்கள் காணப்படுகின்றது. அவையாவன,

| | தேவர்கள் | வலதுகை | இடதுகை |
|---|---|---|---|
| 1. | சிவபெருமான் | திரிபதாகம் | சிம்ஹமுகம் |
| 2. | திருமால் | திரிபதாகம் | திரிபதாகம் |
| 3. | விநாயகர் | கபித்தம் | கபித்தம் |
| 4. | முருகன் | சிகரம் | திரிசூலம் |

சன்மதக் கடவுள்களும் ஒன்றாகிய சக்திக்குரிய (துர்க்கை) ஹஸ்தங்கள் இந்நூலின் பிற்சேர்ப்புப் பகுதியிலுள்ள தேவியர் எனும் பிரிவில் அமைந்துள்ளது.

| | தேவி | வலதுகை | இடதுகை |
|---|---|---|---|
| 5. | துர்க்கை | கடகாமுகம் | சிகரம் |

சன்மதக் கடவுள்களுள் ஒன்றாகக் குறிப்பிடப்படும் சூரிய பகவான் நவக்கிரஹ நாயகனாகத் திகழ்வதால் அவருக்குரிய ஹஸ்தப் பிரயோகம் நவக்கிரஹம் என்னும் பிரிவில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

| | கிரகம் | வலதுகை | இடதுகை |
|---|---|---|---|
| 6. | சூரியன் | கபித்தம் | அலபத்மம் |

சன்மதக் கடவுள்களுள் துர்க்கை சிங்கத்தினையும், விநாயகர் எலியையும், சூரிய பகவான் குதிரையையும் வாகனமாகக் கொண்டுள்ளனர். இவர்களது இவ் வாகனங்களை அபிநயித்துக் காட்டுவதற்கான ஹஸ்தகள் இந்நூலின் பிற்சேர்ப்புப் பகுதியிலுள்ள விலங்குகள் எனும் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவையாவன,

1. சிங்கம் – வலக்கை பதாகம், இடதுகை சிம்ஹமுகம்
2. எலி – அர்த்த முகுழம்
3. குதிரை – மான்தலை ஸ்வஸ்திகம்

சன்மதக் கடவுள்களுள் திருமாலின் கருட வாகனமும், முருகனின் மயில் வாகனமும் நூலின் பிற்சேர்ப்புப் பகுதியிலமைந்த பறவைகள் எனும் பிரிவில் கூறப்பட்டுள்ளது. அவை பின்வருமாறு,

4. கழுகு – ஞான முத்திரை (ஹம்ஸாஸ்யம்)
5. மயில் – மயூர ஹஸ்தம்

மேலும் சிவபெருமானின் வாகனமாகிய நந்திதேவர் சிவகணங்களின் தலைவனாகக் கருதப்படுவதனால் அவருக்குரிய ஹஸ்தகள் நூலின் பிற்சேர்ப்பில் சிவகணங்கள் எனும் பகுதிக்குள் அமைந்துள்ளது.

6. நந்தி – வலதுகை சூசி, இடதுகை திரிபதாகம்

சன்மதக் கடவுள்களின் ஊர்த்திகளுக்கான ஹஸ்தங்கள்


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07032026.03*

(பிரயோகிக்கும் முறை)

1. நந்தி வாகனம்

- சிம்ஹமுகம்

இடது கையில் சிங்கமுக ஹஸ்தத்தினை மார்பிற்கு முன்னால் நாட்டியாரம்ப நிலையில் நீட்டிப் பிடித்து அரைமண்டியில் இருந்தவாறு இரு கால்களையும் கம்பீரமாக மடித்து நாட்டித் தட்டுதல், பஞ்ச நடைகளில் விரும்பியவற்றினை பிரையோகித்து நந்தியின் முன்னோக்கிய அசைவைக் காண்பித்தல், இரு கால்களையும் அரைமண்டியில் இருந்து சற்று அகட்டி வைத்தல். (கண்டிய நடனத்தின் மண்டிய பாத நிலை போன்றது)

- சிம்ஹமுகம் - பதாகம்

இடது கையில் சிங்கமுக ஹஸ்தத்தினை மார்பிற்கு நேராக நாட்டியாரம்ப நிலையில் நீட்டிப் பிடித்து இடதுகை பதாக ஹஸ்தத்தினால் மத்தளம் தட்டுவது போன்று அபிநயித்தல். அரைமண்டியில் இருந்து கால்களில் "திதிதெய்" அடவினைப் பிரயோகிக்கலாம்.

2. கருட வாகனம்

- கருட ஹஸ்தம்

கைகளில் கருட ஹஸ்தத்தினைப் பிடித்துக் கொண்டு இடதுகாலை அரைமண்டி நிலையில் வைத்து வலது காலைப் பின்னால் சறுக்கி நின்று கருட ஹஸ்தத்தினை அரைவட்டமாக அசைத்தல். கருடப்பறவை இறக்கைகளை காற்றில் அடித்துப்பறப்பதைக் காண்பித்தல். இதனைத் தாதெய் தெய்த அடவினைச் செய்தும் அபிநயிக்கலாம்.

இருகைகளிலும் கருட ஹஸ்தம் பிடித்து அசைத்தவாறு வலது காலை முன்னால் ஊன்றி இடதுகாலை பின்னால் மடித்து தூக்கி வலக்காலால் சுற்றுதல் (கருட ப்ரமரீ பாதநிலை)

- அராளம் (சின்முத்திரை)

இருஅராளக் கைகளை உள்ளங்கை முன்புறம் நோக்குமாறு பக்கத்திற்கு நீட்டி முன்னும் பின்னுமாக லாவகமாக அசைத்தல். வலது கால் முட்டியை முன்னால் மடித்து இடது காலை பின்புறமாகத் தூக்கி நின்று இரு கைகளிலும் அராள முத்திரையினை நாட்டியாரம்பத்தில் பிடித்து நாடியை மேலே தூக்குதல்.

3. சிங்கம்

- வியாக்கிரம் (அபூர்வ முத்திரை)

இடதுகையில் வியாக்கிர முத்திரையினை மார்பிற்கு முன் நாட்டியாரம்ப நிலையில் பிடித்து முழுமண்டியில் கம்பீரமாக பாய்ந்து இருத்தல்.

இருகைகளிலும் வியாக்கிர முத்திரையினை மார்பிற்கு முன்னால் குறுக்காக பிடித்து அரைமண்டி நிலையில் இருந்து இரு கால்களையும் பக்கத்திற்கு கம்பீரமாக மடித்து நாட்டித் தட்டுதல், இருகைகளிலும் வியாக்கிரக ஹஸ்தத்தினை மார்புக்கு முன்னால் கம்பீரமாக பிடித்தபடி நடத்தல்.

- பதாகம் - சிம்ஹமுகம்

வலது கையில் பதாக ஹஸ்தத்தினையும், இடது கையில் சிம்ஹமுக ஹஸ்தத்தினையும்


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

நாட்டியாரம்ப நிலையில் பிடித்து கால்களைச் சற்று அரைமண்டி நிலையில் இருந்து அகட்டி வைத்தல்.

4. மூஷிகம்

- அர்த்த முகுளம்

இடதுகையில் அர்த்த முகுள ஹஸ்தத்தினைப் பிடித்து முன்னோக்கி அலை போன்று அசைத்தல். பஞ்சநடைகளில் விரும்பியவற்றை உபயோகித்து மூஷிகம் முன்னோக்கி நகர்வது போன்று அபிநயித்தல்.

- அர்த்த முகுளம் - அலபத்மம்

இடதுகையில் அர்த்த முகுள ஹஸ்தத்தினை மார்பிற்கு முன்னால் நாட்டியாரம்ப நிலையில் வளைத்துப் பிடித்து இடதுகை அலபத்மத்தினை மார்பிற்கு நேராக சற்றுக் கீழே பிடித்தல். கால்களை பக்கத்திற்கு நாட்டி தட்டியும் முழுமண்டி நிலையிலும் அபிநயிக்கலாம்.

5. மயில்

- மயூரம் - மயூரம்

இருகைகளிலும் மயூர ஹஸ்தம் பிடித்து மார்பிற்கு முன்னால் இருந்து கைகளை அசைத்தபடி தலைக்கு மேலாக எடுத்து நாட்டியாரம்ப நிலைக்கு கொண்டுவருதல். இடதுகாலை முன்னால் ஊன்றி வலதுகாலைப் பின்னால் சறுக்கி நிற்றல். வலது மயூர ஹஸ்தத்தினை மயிலின் அலகு போன்று வாய்க்கு அருகில் பிடித்து, இடது மயூர ஹஸ்தத்தினை நாட்டியாரம்ப நிலைக்கு சற்று கீழே பிடித்தல். (வலது முன்மூலையை நோக்கியவாறு) வலது காலை வைத்து இடது காலை மடித்து தூக்குதல்.

- மயூரம் - ஹம்ஸாஸ்யம்

இடது கையில் மயூர ஹஸ்தத்தினை வாயினருகே (அலகு) பிடித்து இடது கையில் ஹம்ஸாஸ்ய ஹஸ்தத்தினைத் தலைக்குமேல் திருப்பிப் பிடித்தல். வலது காலை வைத்து இடதுகாலை மடித்து உள்நோக்கித் தூக்கியபடி நிற்றல். (கழுத்தினை முன்னும்; பின்னும் மயில் போன்று அசைத்தல்)

6. குதிரை

- பதாகம்

இடது கையில் பதாக ஹஸ்தத்தினை மார்பிற்கு முன்னால் பிடித்து 'துரங்கே' அபிநயித்தல் (குதிரை பாய்வது போன்று செய்தல்) கால்களை ஆலீட நிலையில் வைத்து தகிட நடையில் பாய்ந்து குத்தி மெட்டுதல்.

முடிவுரை

சன்மதக் கடவுள்களின் ஊர்தி சின்னங்களும் அவற்றின் தத்துவப் பொருள்களும் மரபின் ஆன்மீகப் பின்னணியை வெளிப்படுத்துகின்றன. இவ்வூர்திகள் வெறும் வாகனங்களாக அல்லாது, தெய்வத்தின் சக்தி, இயல்பு, தர்மப் பண்பு மற்றும் உலகியலான—ஆத்யாத்மிக அர்த்தங்களைச் சுட்டும் அடையாளங்களாகக் கருதப்படுகின்றன. இந்தச் சின்னங்கள் ஆகமம் மற்றும் சாஸ்திர அடிப்படையில் வடிவமைக்கப்பட்டு, ஆலயச் சிற்பம், சின்னவியல் மற்றும் வழிபாட்டு முறைகளில்



தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07032026.03*

நிலைபெற்றுள்ளன. பரதநாட்டியத்தில் இச்சின்னங்கள் ஹஸ்த முத்திரைகள், ஆங்கிக–வாசிக–ஆஹார்ய–சாத்விக அபிநயங்களின் வழியாக உயிர்ப்பிக்கப்படுகின்றன. குறிப்பாக யேவலயளாயளவசய மற்றும் யுடிhiயெலய னுயசியயெ ஆகிய சாஸ்திர நூல்கள் வழங்கும் ஹஸ்த–அபிநயக் கோட்பாடுகள், தெய்வங்களின் ஊர்தி சின்னங்களை மேடையில் நுணுக்கமாக வெளிப்படுத்த வழிகாட்டுகின்றன. இதன் மூலம் சின்னவியல் அறிவு கலைமொழியாக மாறி, பார்வையாளரின் உள்ளத்தில் பக்தி–ரச அனுபவத்தை உருவாக்குகிறது.

ஆகம, சாஸ்திர மற்றும் அபிநய வழிபாடுகள் ஒருங்கிணையும் போது, தெய்வச் சின்னங்கள் கலை வடிவில் தத்துவப் பரிமாணத்துடன் வெளிப்படுகின்றன என்பதே இவ்வாய்வின் மையக் கண்டுபிடிப்பாகும். எனவே, சன் மதக் கடவுள்களின் ஊர்தி சின்னங்களும் பரதநாட்டிய ஹஸ்தப் பயன்பாடுகளும் இடையே உள்ள தொடர்பு, சமயமும் கலையும் பரஸ்பரப் பூரணத் தன்மையுடன் இயங்குகின்றன என்பதை உறுதிப்படுத்துகிறது. இதனால், இத்துறையில் மேலும் களஆய்வு, சாஸ்திர ஒப்பீட்டு ஆய்வு மற்றும் நடைமுறை மேடை ஆய்வு மேற்கொள்ளப்படின், சமய–கலை ஒருமைப்பாட்டின் ஆழமான பரிமாணங்கள் வெளிச்சமடையும் என்பதே இம்முடிவுரையின் சாராம்சமாகும்.

**துணை நூற்பட்டியல் :-**

[1]. தெய்வநாயகம், பா. கோயில் வாகனங்கள். சென்னை வெளியீடு, 2003.
[2]. ஜயலட்சுமி ஈஸ்வர். ஹஸ்த பிரயோக .புதுடில்லி இந்தியா பதிப்பகம், 2006.
[3]. தரங்கினி யு.ளு.யு. ஆங்கிக அபிநயம். அருணா பப்ளிகேஷன்ஸ், 1999.
[4]. செம்மூதாய் சதாசிவம். தமிழர்கலைகள்.பிள்ளைதெரு-சென்னை பதிப்பகம், 2016.
[5]. தமிழ்வாணன் ,லே . சிவபுராணம். சென்னை-94, 1985.
[6]. பத்மா சுப்ரமணியம். பரதக்கலைக் கோட்பாடு. சென்னை - 17, 2009.
[7]. சுபாஷினி பத்மநாதன். நுண்கலை பரதக்கலை. கனடா, 1999.
[8]. செல்லப்பா நவரத்தினம். முருக வணக்கம். கொழும்பு–04, செப்டெம்பர் 2007.
[9]. அருணாசலம், பி. சைவசித்தாந்தம். சென்னை: மணிவாசகர் பதிப்பகம், 2002.
[10].நாதமுனி. நாலாயிர திவ்யப்பிரபந்தம். சென்னை:ஶ்ரீவைஷ்ணவ பதிப்பகம், 1995.
[11].லீலாம்பிகை,செ. நடனசாரம். கொழும்பு, ஜனவரி 2001.
[12].குலரெத்தினம் கா.சி, . அறுவகைச் சமயங்கள். குமரன் அச்சகம், 2010.
[13].கிருஷ்ணமாச்சாரியார். பதிணெண் புராணங்கள். நர்மதா பதிப்பகம், சென்னை.
[14].நடராஜசிவம், சகலசித்தி விநாயகர், நர்மதா பதிப்பகம், சென்னை.
[15].நாராயண கிருஷ்ணமாச்சாரியார். ஶ்ரீகருடபுராணம். நர்மதாபதிப்பகம், சென்னை
[16].நாவலூர் சோமசுந்தரப்புலவர். கந்தபுராணக்கதைகள்.குமரன் அச்சகம்,2020. மூலமும் உரையும். சென்னை: ராமகிருஷ்ணமடம், 2001.

*Copyright © 2026 Tamilmanam International Research Journal of Tamil Studies, All rights reserved.*